SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

~039

# SECOND YEAR EXAMINATIONS IN BACHILOR OF ARTS (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY 2013

## GGY 2.12 RESOURCE UTILIZATION AND SOCIAL GEOGRAPHY

ஒவ்வொரு பகுதிகளில் இருந்தும் குறைந்தது இரு வினாக்கள் தெரிவுசெய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி -1 இயற்கை வளம்

1. அ. இயற்கை வளத்தின் முக்கியத்துவத்தினை அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி ஆராய்க. (10 புள்ளிகள்)

   ஆ. இயற்கை வளப் பாகுபாட்டினை பொருத்தமான உதாரணங்களோடு தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

   இ. இலங்கையின் அபிவிருத்திக்கும் வளங்களுக்கும் இடையே உள்ள தொடர்பினை சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

2. அ. 'வளங்களில் எல்லாம் தலைசிறந்த வளம் மனித வளமே' இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (10 புள்ளிகள்)

   ஆ. 'அதிகரித்துவரும் மனித வளம் இயற்கை வளச் சுரண்டலினை துரிதப்படுத்துகின்றது' இக்கூற்றினை நீர் ஏற்பீரா? உமது விடைக்கான நியாயத்தை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

3. அ. காலநிலையினை தீர்மானிப்பதில் காட்டுவளம் முக்கிய பங்கு கின்றனது. இன்று காட்டுவளப் பரம்பல் சுருங்கி வருவதற்கான காரணங்களை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ. காட்டு வளத்தின் முக்கியத்துவத்தினையும் அதனைப் பாதுகாப்பதற்காக தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் ஆராய்க. (10 புள்ளிகள்)

4. அ. வள முகாமைத்துவத்திற்கான தேவைபற்றி விமர்சிக்குக. (07 புள்ளிகள்)

   ஆ. மூலவளப் பிரச்சினைகளை ஆராய்க (07 புள்ளிகள்)

   இ. வளங்களைப் பாதுகாப்பதற்காக நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் பற்றி ஆராய்க. (06 புள்ளிகள்)

### பகுதி -2 மனித வளம்

5. அ. உலகில் நகரங்களின் தொகை அதிகரிக்கின்றது. இதற்கான பின்னணியினை விளக்குக. (06 புள்ளிகள்)

   ஆ. நகரமயமாக்களினால் தோன்றும் சமூகப் பொருளாதார மற்றும் சூழலியல் பிரச்சினைகளை விளக்குக. (08 புள்ளிகள்)

   இ. கிராமங்களில் இன்று நகரத்தின் பண்புகள் வெளிப்படுகின்றன. இதனை உதாரணங்களோடு விமர்சிக்குக. (06 புள்ளிகள்)

மறுபக்கம் பார்க்க.........

6. அ. நவீன குடியிருப்புப் போக்குகளை ஆராய்க. (07 புள்ளிகள்)

ஆ. அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நகராக்க முறைகளில் காணப்படும் வேறுபாடுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

இ. இலங்கையின் யுத்தத்திற்குப் பின்னரான குடியேற்றத் திட்டங்கள் பற்றி கருத்துரைக்குக. (07 புள்ளிகள்)

7. "இலங்கை எதிர்நோக்கி வரும் மின்கட்டண உயர்வு மக்களிடையே வலு நெருக்கடியை தோற்று விக்கின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை நடைமுறைப் பிரச்சினைகளோடு தொடர்பு படுத்தி ஆராய்க (10 புள்ளிகள்)

ஆ. உலகப் பொருளாதார நெருக்கடிக்கு சக்தி வளங்களும் பிரதான காரணமாகும் விமர்சிக்குக. (10 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பெழுதுக.

அ. கனிய வளம்

ஆ. புதுப்பிக்க முடியாத வளங்கள்

இ. கடல் வளம்

ஈ. அவுஸ்ரேலியா நோக்கிய இடப்பெயர்வு (5x4 = 20புள்ளிகள்)